# DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.18**

| | | | |
|---|---|---|---|
| Name | : நீலமேகம் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 22-10-2025

**முதல் விசாரணை**

நான் தற்போது தாராபுரம் போக்குவரத்து காவல்துறையில் தலைமை காவலராக பணியாற்று வருகிறேன். கடந்த 24.10.2018 ஆம் தேதி மூலனூர் காவல் ஆய்வாளர் உத்தரவின் படி அவரிடம் கடவுச்சீட்டு பெற்று மூலனூர் குற்ற எண் 287 /2018 வழக்கு தொடர்புடைய எக்ஸ்பிரஸ் எஃப்.ஐ.ஆர்–ஐ பெற்று தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒரு நகலும், தாராபுரம் துணை காவல் கண்காணிப்பாளர்கள் ஒரு நகலும், திருப்பூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒரு நகலும் மாவட்ட குற்ற பதிவேட்டு காப்பகத்திற்கு ஒரு நகலும் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். அதன் பிறகு 19.11.2018 ஆம் தேதி உத்தரவின் படி தாராபுரம் குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து ரத்தப் பரிசோதனைக்காக கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை பெற்று கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைத்தேன். அங்கு சேகரித்து வைக்கப்பட்டிருந்த ரத்த மாதிரியே என்னிடம் கொடுத்தார்கள். அதை கோயம்புத்தூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்வுக்காக ஒப்படைத்தேன். அது தொடர்பாக 4.2.2019 ஆம் தேதி ஆய்வாளர் என்ன விசாரித்தார். இரத்த மாதிரியை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைக்க என்னை நியமனம் செய்யப்பட்ட கடிதம் **அ.சா.ஆ.20** ஆகும். இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மூலனூரில் இருந்து தாராபுரம் வருவதற்கு ஒரு மணிநேரம் ஆகும். கோயம்புத்தூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு நான் தடயப் பொருட்களை ஒப்படைத்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் இருந்து ரத்தம் மாதிரிகளை பெற்று ஆய்வகத்தில் நான் ஒப்படைத்து தவறு என்று சொன்னால் சரி அல்ல.

**2ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக் கொண்டார்.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.24 18:57:09 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.